செந்திலாண்டவன் திருவடி துணை.

மைலமலையாண்டவன் தோத்திரம்.

பிர்மஸ்ரீ

திரு-அ-சிவாநந்த சாகர யோகீசுவரர்

மருகரும் மாணாக்கருமாகிய

வரகவி,

திரு-அ-சுப்பிரமண்ய பாரதியார்

அவர்களியற்றியது.

புதுவை

உருளைக்கிழங்கு மண்டி

சரவணையர் அவர்களால்

சென்னை

...சுவரன் பேட்டை

...ல் பதிப்பிக்கப்பட்டது.

...14.

REGISTERED 18 MAR 1914 MADRAS
1019
1·19
Q26:38·214ma
N14
171356

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

மைலமலையாண்டவன்

தோத்திரம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 16 MAR 1914 MADRAS.
1019
1·1

காப்பு.

செந்தமிழ்க் கவிஞர் வாழ்வைச் செழுஞ்சுட ரொளியை யன்பர்
பந்தவல் வினைக ணீக்கிப் பதமருண் மைலை வைப்பைக்
கந்தனைத் துதிக்க வந்தென் கருத்திருந் தருளுந் தெய்வச்
சிந்தூர முகனைத் தேவ தேவனைத் தொழுது வாழ்வாம்.

சீர்பெருகு மாறுமுக கமலவழ குங்குழைச் செவிகளீ ராறினழகும், செவ்வரி பரந்தவீ ராறுவிழி யழகுமொளிர் செம்பவள வாயி னழகும், கார்பரவு மார்பழகு மீராறு மேருநேர் தடவரைத் தோளினழகும், தகதகென நிலவுவடி வேலினிழ குங்கமல சரணமலரிணையினழகும், கார்பரவு விழிவள்ளி தெய்வகுஞ் சரியம்மை கண்டுகண் டுள்ளமகிழக், காதல்தரு மானந்த ரூபனே யடியனைக் காப்பதுன் கடனல்லவோ, பார்பரவு மெய்ஞ்ஞான பாநுவே பக்தபரி பாலகௌ மாரதுரையே, பவமகல வருண்மைல மலைவளரு மழலனே பன்னிருகாக் குமரனே.

கோடிக் கணக்கான தேவர்முதல் தேவர்தங் குறையிரந் தேத்திவாழ்த்தக், கொடியவசு ரேசனுடல் கூறுபட வேல்விட்ட கோதற்ற குமரேசனே, வேடிக்கையாகவெகு காவடிக் காரர்வர வேண்டுவரநல்கியாளும், மெய்யான தெய்வமீ கண்கண்ட திதுவதால் வேறுதுணை நாடமதியேன், மூடிப் படர்ந்தவஞ் ஞானவிரு ளிரியவோர் மூரிக்கலாபமயிலில், மூவிரா தித்தர்நேர் வதனவொளி வீசவென் முன்புவந் தாதரித்தாள், பாடித் துதிப்பவர்க் கமுதமய மாய்க்கருணை பாலிக்கு மின்பவடிவே, பவமகல வருண்மைல மலைவளரும் அமலனே பன்னிருகரக் குமரனே. 2

அச்சமுறு கோரமொடு கர்ச்சித் ததட்டிவரு மலகைவேதாளபூதம்,ஆறுத கவலைதரு தீராத கொடியநோயண்டுமோ நினதுகருணை, வைச்சுமூ வுலகங்கள் மெச்சநீ விளையாடு மகிமை பெறு தலமாறினும், வையகத் துயிர்தழைத் துய்யவருள் பெய்யும்விழி வள்ளிதெய்வானையுடனே, விச்சித்ர விஸ்தார நிர்த்தக்கலாபமயில் மீதுநின் சேவைகண்டு, வேறுகதி யில்லையென் றெண்ணியுனை யேநம்பி மெய்யன்பு செய்யுமவர்பால், பச்சைப் பசுங்கொண்டல் மேனியுமை யம்மையருள் பால

சுந்தர வேலனே, பவமகல வருண்மைமல மலைவளரு மமலனே பன்னிருகரக் குமரனே. 3

ஆரணனு நாரணனு நாடரிய பூரணர்க் காதிமுத லானவேதத்; தரும்பதப் பொருளறி வுறுத்தியரு ளண்ணலே யற்புதா நந்த வொளியே, காரவுணர் குல கால வீரனே தீரனே கஞ்சமலர் வேதனஞ்சக், கைகொண்டு குட்டிவெஞ் சிறையிட்ட தெய்வமே காணரிய வின்பவாழ்வே, ஆரமணி மார்பனே யாறுமுக வேலனே யநாதரக்ஷக தேவனே, அறியா திழைத்தபிழை குறியாது நீயென்னை யாண்டருள வேண்டுமிறைவா, பாரகம் புகழ்தெய்வ வேரகந் தனின்மேவு பரமகாருண்யவடிவே, பவமகல வருண்மைமல மலைவளரு மமலனே பன்னிருகரக் குமரனே. 4

உடலெடுத் தறிவுநான் பெற்றவக் காலமுத லுன்னையல் லாமல்வேறே, ஒருவரைப் பொருளென்று மதியாது நினதுபுக ழோதிமன மகிழுமென்பால், மடையுடைந் தாலென்ன வருள்பொழியு மீராறு மலர்க்கட் கடைக்கணித்து, மகிதலத்தெய்து மிடையூறற வண்ணநீ வாழ்விக்க வேண்டுமமலா, கடலெடுத்துண்டகுட முனிவனுக் கருள்செய்த காருண்ய வடிவேலனே,

கனகமா மயிலேறி விளையாடும் வண்வல்லிகஜவல்லி மன மோகனே, படமெடுத் தாடுவிட வரவின்மிசை நடன மிடு பாலகோபாலன் மருகா, பவமகல வருண்மைல மலைவளரு மமலனே பன்னிருகரக் குமரனே. 5

பிரமனன் றெழுதிய படிக்கின்ப துன்பங்கள் பிச காம லெய்துமெனினும், ப்ரபஞ்சத்தில் மெய்த்தெய்வ முனையன்றி யில்லையிது ப்ரத்தியட்ச மாகுமதனல், கரதல முகிழ்த்துமுத் தேவர்தொழு மேலான கடவுணீ யென்று வேதங், கழறுமொழியு றுதியா லெவைபெறுத லரிதுநீ கருணை கடாட்சம் வைத்தால், சரணார விந்த மென தரணக நின்றுவெஞ் சஞ்சலந் துயரம் வறுமை, தமியனிட நாடாமலாண்டருள வேண்டினேன் சண்முக குமாரதுரையே, பரமகுரு நாதனே திரமுதவு போதனே பகாரிய சதுர்வேதனே, பவமகல வருண்மைல மலை வளரு மமலனே பன்னிருகரக் குமரனே. 6

தந்தைதாய் பெரியோர்க ணிந்தனையி னலரிய தவமகிமை யுடையதுயோர், சாபத்தி னல்வெய்ய கோபத்தி னல்மேவு தையலர்கள் மோகமயலால், வந் தியா துனதடி மறந்தபிழை யாதியால் வந்தபல பாவ மென்பால், மன்னியுள தேனுநீ புகலெனக்கொண்ட

நான் வாழவருள் செய்யவேண்டும், செந்திலம் பதியாவி னன்குடி யமர்ந்தருக தேவருஞ் சரிநாதனே, செகதல மடங்கவொரு நொடியில்வலம் வந்தகவு சிங்கார மயில் வீரனே, பந்தமல திமிரமற வந்தினிதுகாத்தருள்செய் பரிபூரணாநந்தனே, பவமகல வருண்மைமல மலைவளரு மமலனே பன்னிருகரக் குமரனே. 7

என்னபிழை செய்தாலு மன்னவைக ளுன்மனதி லெண்ணு தனுதருப்ப, ஏறுமயின் மீதுகுறை தீரவரு மெய்யான வீசனீ யாகுமதனால், சென்னியுனை யல்லாம லின்னமொரு தெய்வத்தின் சேவடிவணங்கு மோவாய், தீங்ககல வந்தென்னை யாதரிப் பாயென்று செப்புமோ வொப்பில்வேலா, முன்னைவினை யால்வந்த வின்னலறு மாறந்த முத்திதரு சத்திபாலா, மூடமதியேன்றமிழ்ப் பாடற் கிரங்கியருள் மூவுலக மேத்துமுதல்வா, பன்ன கப் பாயன்மிசை கண்வளரு மாயன்முற் பண்ணவர்க ளெண்ணிவாழ்த்தும், பவமகல வருண்மைமல மலைவளரு மமலனே பன்னிருகரக் குமரனே. 8

மூவராந் தேவர்முத லானபர தெய்வநீ முத்தொழி னடாத்து மிறைநீ, மும்மலக் கட்டறுத் தன்பர்மன மின்பமுற முத்திதரு கர்த்தநீயே, யாவரா லுன்மகிமை

யளவிடற் கரியதா மகிழ்புவ னங்கடந்த, அற்புதச்
சிற்சொரூ பானந்த மூர்த்தியே யம்பிகைக் கின்பமகனே,
தாவிவான் புடரவோர் பற்றின்றி வாடிடுந் தளிரிளங்
கொடி போலவே, சஞ்சலத் தாலென்ன செய்வதென்
றுணராத சமையமீ தருளண்ணலே, பாவனு தீதனே
பரமகுரு நாதனே பழனிமலை முருகேசனே, பவமகல
வருண்மைமல மலைவளரு மமலனே பன்னிரு கரக்
குமரனே. 9

சிதரன துககமல விழிமல ருதித்துவளர் தெய்
வானை வள்ளியிருபால், சேர்ந்தொளிர வெற்றிவடி
வேல்கொண்டு நட்டமிடு சித்ரக்க லாபமயிலில், தாத
விழ்ந் தலர்மலர்ச் சோலைசெறி சோலைமலை தனிப்பரங்
குன்றேரகம், தணிகா சலஞ்செந்தி முதலான தலமெ
லாந் தங்கிவிளை யாடுமமலா, நாதனிலை வேறுநீ யாண்ட
ருள்செ யென்றுன்னை நம்பித்து திக்கவந்நாள், நற்ற
மிழ்க் கவிவல்ல கீரனைச் சிறைமீட்ட ஞானப்ர காச
வொளியே, பாதமல ரன்றியோ ராதரவு காண்கிலேன்
பாதுகாத் தருளண்ணலே, பவமகல வருண்மைமல மலை
வளரு மமலனே பன்னிருகரக் குமரனே. 10

முற்றிற்று.

உ

காப்பு.

ஆனை மாமுகத் தானைப் போற்ற மெய்ஞ்
ஞான மோங்குமெந் நாளு முள்ளமே.

திருமருவு மணிமகுட மாறுமோ ராறு மதி
சேர்ந்துதய மானதெனவே
திகழுமுக மாறுமருள் பொழிவிழிக ளீராறும்
செம்பவள வாய்க ளாறும்
மருமருவு நீபமலர் மாலையணி மார்புமுயர்
மாமலைப் புயமீ ராறும்
மரைமலரின் நிரையென்ன நிலவுகர மீராறும்
மாயவசு ரேசனுயிரை
ஒருகணத் துண்டவடி வேலுமெடு மாலீன்ற
ஒப்புயர்வி லாத தெய்வ
ஒண்டொடிய ரிருவரும் முபயநூ புரவடியும்
ஒளிர்பசுந் தோகை மயிலும்
கருமருவு துயரமற வெனதுமன மலரிலொரு
காட்சியென நின்றருளுவாய்
கைலைமலை யீசனருள் மைலமலை நாதனே
கந்தனே யெங்கள் கோவே.

171386

பகரிய மெய்ஞ்ஞான பானுவே யுலகமருள்
பாலையுமை யம்மையீன்ற
பாவநா தீதனே பரமகா ருண்யனே
பாவவினை போக்கி யாளும்
நிகரிலா வேலனே நித்யகல் யாணனே
நின்னடித் தொண்டு செய்யும்
நேயர்மன மேவியரு ளாயனரு மருகனே
நீண்டபுகழ் பூண்ட செந்திற்
சுகரூப தீரனே சுகுணகம் பீரனே
தூயமறை நானு மோதும்
சுத்தனே சித்தர்தொழு மத்தனே சித்திரத்
தோகைமா பயில்வீரனே
சுகனசுர ராசனர சுரிமைபெற வமர்செய்த
கருணை கரக் கடவுளே
கைலைமலை யீசனருண் மைலமலை நாதனே
கந்தனே யெங்கள் கோவே. 2

விண்கொண்ட வமரரொடு பிரமனரி யடிபரவ
வேல்கொண்டு சாடி யவுண
வீரன்சூ ரன்சிங்கன் தாரகன் னுடல்வேறு
வேறாக வமராடிய

தண்கொண்ட வருள்கொண்ட ஷண்முகக் கடவுளே
சர்வாண்ட கோடியீன்ற
சைலமா துமைதந்த சரவண பவாநந்த
சாமியே பூமி புகழப்
பண்கொண்ட மறைகொண்ட பிரணவப் பொருளறிய
பரசிவற் கோதி யருளும்
கண்கண்ட தெய்வமே எண்கொண்ட சோதியே
கார்கொண்ட வானளாவு
கைலைமலை யீசனருண் மைலமலை நாதனே
கந்தனே யெங்கள் கோவே. 3

ஞானஒளி யில்லேனை மோனநிலை நில்லேனை
ஞானநெறி தன்னை யோரா
நாயெனைத் தீயேனை நோயேனை நலிவேனை
நல்லநிய மங்க ளில்லா
ஈனமதி யேனைமனை மக்கள்பொரு ளாக்கமிவை
எவையும் வெவ் வினை வசத்த
வென்பது ணராதுழைத் தோடியோ டித்தேடி
யீட்டுமொரு பாவியேனை
வானவர்கள் சிறைமீட்ட ஞானப்ரகாசனே
வாள்கொண்டு வீசவந்த

வஞ்சகன் வன்பாசம் நீக்கியுபர் முத்தியெனு
வான்பெருஞ் செல்வ மீந்த
கானவிரு நீபமலர் மாலையணி மார்பனே
காக்கவுங் கருணை யுண்டோ
கைலைமலை யீசனருண் மைலமலை நாதனே
கந்தனே யெங்கள் கோவே.

பற்பல விதத்திலுந் தொல்லைபல வாக்குமிப்
பாருலக வாழ்வி னாலும்
படும்பாடு சொல்லவெளி தல்லவதனாற் பிறவி
பாழான தேழை நெஞ்சும்
நிற்குநிலை யுணராது கற்புநிலை நில்லாத
நேரிழையை யொத்த தன்பர்
நெஞ்சத் திருந்துவினை துஞ்சத் தடங்கருணை
நேர்ந்துதவு செந்தின்முருகா
பொற்பதும பதமன்றி வேறுகதி காண்கிலேன்
பூவுலகி லஞ்ச லென்பார்
புண்யனே சிவசுப்ர மண்யனே யெவருமிலை
புகலவோ யிதுவு னக்கும்
கற்பனை கடந்தபர மாநந்த ரூபனே
கடையேனை யாள வருவாய்

கைலைமலை யீசனருண் மைலமலை நாதனே
கந்தனே யெங்கள் கோவே. 5

உள்ளும் புறமுமுன துருவமே கண்டுதொழும்
உண்மையுணர் வென்று வருமோ
ஒழியாத பத்தியு மழியாத புத்தியும்
ஊக்கமு முறுவ தெந்நாள்
தள்ளரிய மாயா விகாரங்க ணீங்கிமெய்த்
தனிஞான முறுவ தெந்நாள்
சாதல்பிறப் பானொந்து சஞ்சலப்படும் நெஞ்சு
சந்தோஷ முறுவ தெந்நாள்
பிள்ளைமதி நுதல்வள்ளி கஜவல்லி நேசனே
பேசரிய ஞான வொளியே
பீடுற்ற வாவினங் குடிவாழு மமலனே
பேரறிஞர் போற்றுமிறையே
கள்ளவினை நீக்கியருள் வள்ளலே யெங்கள்குல
கடவுளே அமரர் போற்றும்
கைலைமலை யீசனருண் மைலமலை நாதனே
கந்தனே யெங்கள் கோவே. 6

உனையன்றி யுலகமிலை யென்றறையு நூல்களும்
உணர்வுடைப் பெரியர் சொல்லும்

ஒன்றல்ல விரண்டல்ல ஒருகோடி யல்லவவை
யோதிடற் கரிய வாகும்
உனதுதிரு வடிபரவு மடியர்பெறு நேர்மையு
மொப்புயர்வி லாத புகழோ
டோங்குமுன் கோயிலும் கோயில்வலம் வந்தபேர்
உற்றநோய் தீர்ந்துய் வதும்
மனமுமிரு கண்களுங் காணும்ப்ர மாணங்கண்
மண்மீதி லிவைகண்டும் வீண்
வாதிழைத்துத் தெய்வ மேதெனப் பேசிடும்
வம்பர்க்கு மின்ப முண்டோ
கனகமய மயிலேறு மனகனே என்மனக்
கமலமல ரிலகு மொளியே
கைலைமலை யீசனருண் மைலமலை நாதனே
கந்தனே யெங்கள் கோவே. 7

மணங்கொண்ட மலரெடுத் தனுதினமு முனதுதிரு
மலரடிப் பூசை செயவும்
மறவாதுன் னுமநா வெப்போதும் வாழ்த்தவும்
மதுரம் பழுத்த தமிழில்
குணங்கொண்ட தோத்திரப் பாமாலை பலகோடி
கோடி யாகப் புனைந்து

குறமகளு மரமகளு மருவு மீராறுதோட்
குன்ற மதிலே சூட்டவும்
பணங்கொண்ட சேடன்முடி கிடுகிடென விடவொளிர்
பச்சைப் பசுந்தோகை மேல்
பவனிவரு முருகனே பரமகுரு நாதனே
பண்டைவினை நீக்கி யருள்வாய்
கணங்கொண்ட தேவரா கரவென்று சாற்றியிரு
கைகுவித் தேத்து மம்பொற்
கைலைமலை யீசனருண் மைலமலை நாதனே
கந்தனே யெங்கள் கோவே. 8

எண்ணமுடி யாதபல கோடிபெண் ணங்களுக்
ஈடுபட்டென்னெஞ்சமும்
இளைத்துக் களைத்தில்லை யுனையன்றி யென்றுதன்
இயற்கைக்குணங் கடந்து
திண்ணமாய் நம்பியுன் றிருவடித் துணைமலர்
சேர்ந்துபுகல் போந்த தாதித்
தெய்வமறை பரவுமுரு கேசனே நேசமிகு
தெய்வகுஞ் சரி நாதனே
புண்ணியப் பலனிலா வேழைபிழை பலவும்
பொறுத்தா தரிக்க வருவாய்
பூங்கமல வேதனைச் சிறையிட்ட மெய்ஞ்ஞான
போதனே யமரர்போற்றுங்

கண்ணன்மகிழ் மருகனே விண்ணவர்க் கிறைவனே
காளவிடமுண்டகருணைக்
கைலைமலை யீசனருண் மைலமலை நாதனே
கந்தனே யெங்கள் கோவே. 9

எங்குமா யெவையுமா யெவையுமல் லாததா
யீதென்றியம்பவொண்ணு
ஏகமாய் மோகமா யேகாந்த யோகியர்தம்
இதயார விந்த மேவித்
தங்குமொரு தீபமாய்த் தந்தையொடு தாயுமாய்ச்
சகலர்க்கு மேலானதாய்த்
தண்ணருட் செல்வமாய்ச் சமயமோ ராறுமாய்ச்
சண்முகப் பேருருவமாய்ப்
பொங்குசுவை மொழிவள்ளி தெய்வானை நாதனுப்ப
போற்றியிப் பூமி யெங்கும்
புகழுமெய்ச் சாமியாய்த் திகழுமுரு கேசனே
போதமயமான வுருவே
கங்கைநதி யறுகுவிரை வீசுபூங் கொன்றையும்
ககனவிண்மதியும் வேய்ந்த
கைலைமலை யீசனருண் மைலமலை நாதனே
கந்தனே யெங்கள் கோவே. 10

600 008.